[1991 செப்டம்பர் 25

சங்கரத்தேவன்கால் அணைக்கட்டு மற்றும் பாளையாறு அணைக்கட்டு கட்டுமானப் பணிகள்.

73—

*213. திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கடலாடிப் பகுதியில் சங்கரத்தேவன்கால் அணைக்கட்டு மற்றும் பாளையாறு அணைக்கட்டுகளின் கட்டுமானப் பணிகள் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்படி கட்டுமானப் பணிகளை 1991—92 ஆம் ஆண்டுக்குள் எடுத்து முடிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரத்தேவன் கால்வாய் என்பது ஒரு தனித் திட்டம். பாளையாறு என்பது ஒரு தனிதிட்டம் இரண்டு திட்டங்களிலும் ஒரு பகுதி வேலைகள் நடைபெற்று பாதியில் முடக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மிகுதி தொகை எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இரண்டும் வெவ்வேறு திட்டங்கள் என்பதை இந்த அரசு அறியும். அந்தத் திட்டத்திலே ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைகள் நடத்தப்பட்டு, அதிலே குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் இடையிலே தடைபட்டுவிட்டது. இந்த அரசு வந்தவுடனே நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றி கவனத்திற்கு கொண்டு வந்து, உடனே உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து, சங்கரத் தேவன்கால்வாயை சீரமைப்பதற்காக ஏறத்தாழ ரூ. 85 இலட்சமும், பாளையாறு அணைக்கட்டுத் திட்டத்திற்காக சுமார் ரூ. 4.36 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்தத் திட்டத்திலே குறைபாடு இருந்த காரணத்தினால் இந்த திட்டம் நிறுத்தப்பட்ட காரணத்தினால் கண்காணிப்புப் பொறியாளர் அளவிலே ஒருவரை நியமித்து அந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, கண்காணிப்புப்பொறியாளர் அளவில் அருப்புக்கோட்டை வட்ட கண்காணிப்பு

பொறியாளரை நியமித்து, இந்தத் திட்டத்தை உடனடியாக நல்ல முறையிலே இந்த ஆண்டுக்குள் முடித்து தரப்படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் 1982-ல் 'புட் ஃபார் வொர்க்' என்ற திட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டு என்.ஆர்.இ.பி. என்ற திட்டத்திலே உயிர் கொடுக்கப் பட்டு, ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற திட்டத்தில் 1986-87 ஆம் நிதி ஆண்டில் துவக்கப்பட்டது. அடுத்து வந்த ஆளுநர் ஆட்சியிலே முடக்கப்பட்டு விட்டது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : கடந்த இரண்டாண்டு தி.மு.க ஆட்சியில் கேட்பாரற்ற நிலையில் இருந்தது. ஏழை விவசாயிகளுடைய தேவை தன்னுடைய தலையாய சேவை என்று கொண்டுள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் உங்களுடைய கண்காணிப்பு பொறியாளருக்கு, நடப்பு பாசனத்திற்கு பயன்பெறுகிற வகையில் இதை உடனடியாக துவக்க வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பி, நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அரசை பொறுத்தமட்டிலும் அவருடைய அரசு சில திட்டங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி காலதாமதம் செய்வதைக் கூட விரும்பவில்லை. இந்தத் திட்டம் முக்கியமான திட்டம் என்ற காரணத்தால், கடந்த கால அரசு இதை கிடப்பிலே போட்டிருந்தாலும் நான் ஏற்கனவே கூறியதைப் போல் தம்முடைய அரசு பொறுப்பேற்ற உடனேயே உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நான் ஏற்கனவே கூறியது போல கண்காணிப்புப் பொறியாளரை வைத்து இத்திட்டம் இந்த ஆண்டிற்குள் முடிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 74, திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.